# தினசரி வழிபாட்டு முறை



# 9.ஸ்ரீ ஞானபுரீச்வரர் தேவாரம்

**நாட்டை** **காப்பு** **ஆதி**

மோதக பாஶாங்குஶ கனகும்பமும்
மொய் யொளி ஓர்கொம்பும்
மாதவர் மனமலர் மாறிலாதுரை தரும்
மலரடி யிரண்டோடே
நாத ஓங்காரத் திருவுருக்கொண்டு
ஞானானந்த தபோவனம் வாழ்
நாத கஜானன ஞான கணேஶ நின்
நன்மலர் அடிபோற்றி

## பதிகம் பண் நட்டபாடை

தேனார் கொன்றையும் தீம்புனல் மத்தமும்
திங்களொடு சூடி
கானா முதத்தோடு கருத்தே உருகுவார்
அன்புளத் தேயகலான்
ஞானா னந்தபுரி ஞானா னந்தகிரி
நல்லருள் கூட்டிடலால்
வானா டளித்துடன் தானாய் நிறுத்துவன்
வண்மலர்த் தாள்நிழலே 1

அலகொடு மெழுகிட்டு அன்பினால் நரும்புகை
ஆனெய் விளக்கேற்றி
மலர்தொடுத் தளித்திடு வார்மனத் தகலாத
வள்ளல் வார்சடையான்
அலகிலா அருள்ஞானா னந்த தபோவன
ஞானபு ரீச்சுரனார்
மல மறுத்திணையடி மற்றீண்டு வாரா
வகைமுத்தி வழங்குவனே 2

மாவடிக் காஞ்சியோ மாகமாந் தில்லையோ
மற்றரு ணாசலமோ
தேவன் ஆனைக்காவோ திகழ்தரு காளத்தி
திரியாது நெஞ்சே நீ வா
மூவடி கேட்டன்று முழுதுல களந்தானும்
முந்துவீரட்டனமர்
கோவலூர் மாநகர் குறுகுஞானானந்த
ஞானபு ரீச்சுரமே 3

பெண்ணமர் பாகத்தன் பெண்ணை நதிக்கரை
பேசு ஞானானந்தரோ
உண்ணிறை யன்பர்கட் கருள்செய நிற்கையில்
உறுதுயர் ஏன் உனக்கே
பண்ணிறை பாடலும் பக்தியும் உள்ளத்துப்
பற்றறும் பாங்குடனே
கண்ணிறை கர்த்தனைக் காணநீ நன்னெஞ்சே
கடுகு தபோவனமே 4

ஞான கனேஶனும் ஞான தண்டாயுதன்
ஞானாம்பிகையோடு
தேனமர் மாவின் கீழ் கிரிஞானா னந்தரின்
திருவடி நீங்காத
தான நற்சிந்தையால் சார்ந்திடு நெஞ்சமே
தன்னிக ரில்லாமை
ஆனநற் பதமுனக் களித்தருள் வானுயர்
ஞானபு ரீச்சுரனே 5

அந்தகா சுரன்றன்னை யடர்த்தவீ ரட்டனும்
அமுதருள் கோவலனும்
முந்துற எழுந்தருள் முதுநகர் கோவல்சார்
மூதறி வாளர் நிறை
எந்தை ஞானானந்த எழிற்குரு அருளென்ன
இன்னிழற் சோலைவளர்
வந்தவர் வினைபோக்கும் ஞானபு ரீச்சுரன்
மலரடி சார்நெஞ்சமே 6

உடற்பிணி மட்டுமே உளப்பிணி யுந்தீர்த்து
ஓதரு வீடெய்தவே
மடத்தகை நீக்கிநன் மலரடி காட்டுமோர்
வள்ளல் ஞானானந்தர் சேர்
இடத்தமர் ஞான புரீச்சுரன் மலரடி
இந்தமிழாற் பாடிக்
கிடத்திநன் நெஞ்சமே கேளினிப் பிறவாமை
கிட்டுமோர் அட்டியின்றே 7

காமக்கு ரோதமே லோபமே மோகமே
காண்மத மாற்சர்யமே
தாமணு காவகை தண்ண ருளால்நமைத்
தகுதியால் ஆட்கொள்ளுவான்
பாமர ராயினும் பண்பின ராயினும்
பகர் அறிவுரை சாற்றும்
நாமஞா னானந்த கிரியுடன் அமர்தரு
ஞானபு ரீச்சுரனே 8

தன்கடைக் கண்ணினால் தாயென அறிவுரை
சாற்றுதந் தையும்போலே
மண்ணிடை மானினால் மான்பிடிப் பார்போல
வந்தருள் ஸத்குருவாய்
விண்ணவர் சிவரத்ன கிரிதரு வடிநீங்கா
மேன்மைஞா னானந்தர்பால்
கண்மணி யொப்பவர் கருதுவார் பிணி நீக்கும்
ஞானபு ரீச்சுரனே 9

நற்றமிழ் பாபாடி ஞானபு ரீச்சுரன்
நல்லடி யுளங்கொண்டே
உற்றிடு ஞானா னந்தர் தம் திருவருள்
உறுமன்ப ரொடுங் கூடிப்
பற்றிய இருவினைப் பாசமும் போயறும்
பாங்கினால் நமன்வாதை
அற்றவர் சூழிடம் ஆகுந் தபோவன
அண்ணல் தம் அடிபற்றே 10